# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATION IN BACHELOR OF COMMERCE (EXTERNAL) - 2009 / 2010 HELD IN DECEMBER - 2010

## COM 23 – COMMERCIAL AND INDUSTRIAL LAW

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) "கொடைமுனைவானது ஏற்புச் செய்யப்படுவதற்கு முதல் எந்நேரத்திலும் அதனை முனைந்தவரால் வாபஸ் பெறப்படலாம். ஆனால் ஏற்பின் பின்னரான வாபஸ் பெறுகை ஒப்பந்தத்தைப் பாதிக்காது." விளக்குக.

    (ஆ) "கொடைமுனைவானது நியாயமான கால எல்லைக்குள் ஏற்புச் செய்யப்பட வேண்டும். காலங் கடந்த ஏற்பு ஒப்பந்தத்தை உருவாக்காது." தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் ஆராய்க.

02. (அ) பொருள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 13 இன் கீழுள்ள மறைமுக நிபந்தனைகள் எவை? அவை எந்தளவுக்கு ஒரு விற்பனை தொடர்பில் முக்கியம் பெறுகின்றன?

    (ஆ) மாதிரி மூலமான விற்பனையில் (Sale by Sample) காணப்படும் அவசிய நிபந்தனைகள் எவை?

03. "மோசடிகள் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் (PFO) 18ம் பிரிவின்படி, பங்குடமை உடன்படிக்கையானது கட்டாயம் எழுத்தில் இருக்க வேண்டும்." பங்குடமையின் உருவாக்கம் தொடர்பில் இக்கூற்றின் பொருத்தம் எந்தளவு முக்கியத்துவம் பெறுகின்றது என்பது பற்றி தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் ஆராய்க.

04. (அ) எவ்வாறான சூழ்நிலைகளில் முகவராண்மை ஒப்பந்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படும்?.

    (ஆ) "பெயர் வெளிப்படுத்தப்பட்ட முகவர் மட்டுமே அதிகாரமின்றிச் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தலாம்." விளக்குக.

05. (அ) "தேசவழமைச் சட்டத்தின் ஏற்புடைமை முஸ்லிம் சட்டத்தின் ஏற்புடைமையிலிருந்தும் வேறுபட்டுக் காணப்படுகின்றது."
மிகவும் சுருக்கமான முறையில் விளக்குக.

(ஆ) "இலங்கையின் சட்ட முறைமை பல சட்டக் கூறுகளின் கலவையாகும்."
இக்கூற்றின் உண்மைத் தன்மை பற்றி சுருக்கமாக விளக்குக.

08. பின்வருவனவன பற்றி குறிப்பெழுதுக.

(அ) Merritt Vs Merritt

(ஆ) ஒரு தொழிலாளியின் வேலை எவ்வாறான சந்தர்ப்பத்தில் முடிவுக்குக் கொண்டுவரப்படலாம்?

(இ) காப்புறுதி நலன் (Insurable Interset)

***